# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் $A^+$ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைக்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024,

முனைவர் பா. ஜெயபிரகாஷ், M.L.I.Sc., M.Phil., Ph.D.,
தேர்வு நெறியாளர் (பொ)

அலுவலகம் : 0431 – 2407016, 2407060
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in

---

ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /நவம்பர் 2025/நாள்: 26.09.2025

பெறுபவர்
முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** இளநிலைத் தேர்வுப் பிரிவு – நவம்பர் 2025–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணை தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** துணைவேந்தர் பொறுப்புகுழு ஆணை நாள்: 26.09.2025

---------

பார்வையில் காணும் துணைவேந்தர் பொறுப்புகுழுவின் ஆணையின்படி, நவம்பர் 2025-ஆம் பருவத்தேர்விற்கான இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளின் தேர்வுக் கால அட்டவணை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் (1) | பாடப்பிரிவுகள் (2) | செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் (3) | செய்முறைத் தேர்வுகள் முடிவுறும் நாள் (4) | செய்முறைத்தேர்வு மதிப்பெண்களை New Portal-ல் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் (5) | அனைத்து எழுத்துத் தேர்வுகளுக்கான அக மதிப்பெண்களை பதிவேற்றம் செய்ய கடைசி நாள் (6) |
|---|---|---|---|---|---|
| 1 | B.A/B.B.A/B.Com. B.Com. (C.A.) | 10.10.2025 | 28.10.2025 | தேர்வு நடைபெறும் நாள் அன்றே | 07.11.2025 |
| 2 | B.Sc. | 10.10.2025 | 28.10.2025 | தேர்வு நடைபெறும் நாள் அன்றே | 07.11.2025 |

செய்முறைத் தேர்வுகள் (Practical exams for B.A., B.B.A.,B.Sc., & B.Com C.A) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத்தேர்வு கால அட்டவணையை மூன்று நகல்கள் தயார் செய்து **03.10.2025 (வெள்ளிக்கிழமை) தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கல்லூரிகளில் இருந்து பெறப்படும் செய்முறைத் தேர்வுக்கால அட்டவணையை தேர்வு நெறியாளரின் ஒப்பத்துடன் கல்லூரிக்கு மீள அனுப்பப்படும். அதன் பிறகே, செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கோள்ளப்படுகிறது. காலதாமதமாகக் 03.10.2025-க்கு பிறகு கிடைக்கப்பெறும் தேர்வுக்கால அட்டவணைகள் பரிசீலிக்கப்படாது எனத் தெரிவிக்கலாகிறது.**

இந்நிலையில், பார்வையில் காணும் துணைவேந்தர் பொறுப்புகுழுவின் ஆணையின்படி, கீழ்காணும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நேரத்திற்கு (Session) பத்து மற்றும் 10-க்குக் குறைவாக மாணாக்கர்களைக் கொண்டுள்ள பாடப்பிரிவுகளுக்குத் தேர்வுக் கால அட்டவணையின்படி அந்தந்த கல்லூரிகளே செய்முறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நேரத்திற்கு (Session) பத்துக்கு (10-க்குக்)மேல் உள்ள மாணாக்கர்களைக் கொண்ட பாடங்களுக்கு பல்கலைக்கழகம் புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்படும். தேர்வு நாளில் புறத்தேர்வாளர் வராதபட்சத்தல் அருகிலுள்ள கல்லூரித் துறை ஆசிரியரைப் புறத்தேர்வாளராக கல்லூரியே நியமனம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட வேண்டும். அன்றைய தினமே, கல்லூரி நியமனம் செய்த புறத்தேர்வாளர் குறித்த விவரத்ததைப் பல்கலைக்கழகத்திற்கு email-இல் (coe@bdu.ac.in) தெரிவிக்க வேண்டும்.

மேலும் கல்லூரிகளில் அந்தந்தப் பாடப்பிரிவுகளுக்குப் பல்கலைக்கழகத்ததால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், செய்முறைத் தேர்வை நடத்திட வேண்டும்.

அவ்வாறு நடத்தும்பொழுது ஏற்கனவே, 10 மற்றும் 10க்குக் கீழ் உள்ளவாறு பிரித்து செய்முறைத் தேர்வுக்கான கால அட்டவனையை அனுப்பி இருந்தால், ஒரு நேரத்திற்கு (Session) மாணாக்கர்களின் எண்ணிக்கையை பத்தி 2-இல் தெரிவித்துள்ளவாறு 10-க்கு மேல் உள்ளவாறு காலையிலோ அல்லது மாலையிலோ நடத்திரும் வகையில் மாற்றி அமைத்து அருகிலுள்ள கல்லூரியிலிருந்து புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழக ODD Semester / EVEN Semester) செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவிகள், அந்தந்தப் ODD Semester / EVEN Semester) பருவத்தேர்வில்தான் செய்முறைத் தேர்வுகளைச் (Practical Examinations) செய்திட இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் எழுத்துத் தேர்வுகளுக்கான அக மற்றும் புற மதிப்பீட்டு மதிப்பெண்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் exams1.bdu.ac.in/ New Portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், New Portal-ல் மேற்குறித்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 07.11.2025 எழுத்துத்தேர்வுகளுக்கான அகமதிப்பெண்களையும், செய்முறைத் தேர்வுகளுக்கான மதிப்பெண்களை, செய்முறைத் தேர்வு நடைபெறும் நாள் அன்றும், பதிவேற்றம் செய்திடுவதை உறுதிப்படுத்துமாறு முதல்வர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களையும் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாக பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணவ/மணவிகளின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்ககொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர்(பொ)

<u>நகல்.:</u>

1. இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைகழகம்.
2. மந்தனப்பிரிவு - I , II பாரதிதாசன் பல்கலைகழகம்.
3. கணக்குப்பிரிவு - பாரதிதாசன் பல்கலைகழகம்.
4. கணினிப் பிரிவு (U.G).
5. பிரிவு அலுவலர்கள், B.A/B.B.A/B.Com., B.Sc., பாடப்பிரிவுகள்